# மரியாதை

1

# சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

46. இப்பொழுது, கவனியுங்கள். அதன்பிறகு எலியா, இன்னுஞ் சரியாகச் சொன்னால், எலிசா, தான் திரும்பிச் சென்று, கலசத்திலிருந்த (cruse) கொஞ்சம் உப்பைக்கொண்டு, கசப்பான தண்ணீரை தித்திப்பாக ஆக்கினான். ஓ, அற்புதங்கள் அப்படியே எல்லாவிடங்களிலும் பறந்து கொண்டிருந்தன.

47. அதன்பிறகு அங்கே ஒரு... ஓ, அவனுக்கு ஒரு... இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அவனுக்கு கோபமும் கூட இருந்தது. அவனுக்கு வழுக்கைத்தலை இருந்த காரணத்தினால், சில பிள்ளைகள் அவனைப் பார்த்து கேலி செய்தார்கள். உடனே அவன் அந்தப் பிள்ளைகளைச் சபித்தான், அது அதிகமாக பிள்ளைகளின் நிமித்தமாக அல்ல; தேவனுக்கு மரியாதை செலுத்தும்படியாக, தங்களுடைய பிள்ளைகளை வளர்க்காமல் இருந்த அந்தப் பெற்றோர்களின் நிமித்தமாக அது அவ்வாறு நடந்தது. அதுதான் அதுவாக இருந்தது. அந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இழந்தார்கள், ஏனென்றால் இரண்டு பெண்கரடிகள்

அந்தப் பிள்ளைகளில் நாற்பத்திரண்டு பேரைக் கொன்றுபோட்டது; நிச்சயமாக நூறு அல்லது அதற்கும் அதிகமான பிள்ளைகள் எலியாவுக்கும் பின்னால் ஓடி வந்திருப்பார்கள். அவன் சமாரியா வழியாகப் போய் கொண்டிருந்தான், அங்கே நீண்ட காலமாக வார்த்தையானது அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டிருந்தது, மேலும் இந்தத் தீர்க்கதரிசி... ஆனால் அங்கே ஏதோவொன்றை நீங்கள் காண்கிறீர்களா? அது தேவனுடைய செய்தியாளனைப் பற்றிய ஜனங்களுடைய மனப்பான்மையாக இருக்கிறது.

48. இந்த உலகத்திலே எப்பொழுதாவது தேவனுடைய செய்தியாளன் மத சம்பந்தமான மனிதர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது கிடையவே கிடையாது. அது எப்பொழுதாவது இருந்ததா என்று வார்த்தையில் எனக்குக் காட்டுங்கள் பார்க்கலாம். கிடையவே கிடையாது. பெயரளவிலான சபை, ஆதிகால துவக்கம் முதல் தொடங்கி, தேவனுடைய செய்தி ஒவ்வொரு முறையும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. இன்றும் அதற்கு எந்த குறைவான காரியத்தையும் அது செய்யும் என்று உங்களால் எதிர்பார்க்க முடியாது.

49. இயேசு வந்தபோது, அவர் புறக்கணிக்கப்பட்டார். அவர், "உங்களுடைய... எவன் ஒருவன், உங்களுடைய, அல்லது உங்கள் பிதாக்களில் எவன் தீர்க்கதரிசிகளை கல்லால் எறியாமல் இருந்தான்? எவன் தீர்க்கதரிசிகளைப் புறக்கணிக்காமல் இருந்தான்?" என்று கேட்டார்.

50. இப்பொழுது, இங்கே இந்தச் சிறு கதையைப் பாருங்கள். வரிகளுக்கு இடையே வாசியுங்கள் (எனக்கு அது பிடிக்கும், உங்களுக்கும் இல்லையா?), வரிகளுக்கு இடையில். ஏன், வெளியே போய்க் கொண்டிருந்த இந்தச் சிறு பிள்ளைகள், வழுக்கைத் தலையாக இருந்த இந்தப் பிரசங்கியாரைப் பார்த்து, கேலி செய்து கொண்டிருந்தன. **அவைகள் அவனைப் பார்த்து என்ன சொன்னார்கள் என்று பாருங்கள்: "வழுக்கைத் தலையா, எலியாவைப் போன்று நீ மேலே போகவில்லையா?" என்று அந்தப் பிள்ளைகள் கூறினர். எலியா மேலே போனான் என்று அவர்கள் நம்பவில்லை, அவர்கள் அதை சந்தேகித்தார்கள்.**

51. அவர்களுடைய ஆசாரியர்களும் அவர்களும் அவர்களிடம் கூறியிருந்தார்கள், அவர்கள் அநேகமாக, "ஓ, அவன் மேலே

போகவில்லை. அது கொஞ்சம் மதவெறித்தனம் தான். அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட அதே அபிஷேகத்தைக்கொண்டு இந்த ஆசாமி அபிஷேகம் பண்ணப்பட்டான் என்று எதிர்பார்ப்பதா. ஓ, அது முட்டாள்தனம். இவனையும் மேலே போகும்படி இவனிடம் சொல்லுங்கள்" என்று கூறியிருந்திருப்பார்கள்.

52. இதோ அந்தச் சிறு குழந்தைகள் போகிறார்கள். "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து ஆளாக்கு." பெற்றோர்கள் அதை விசுவாசியாத காரணத்தினால், இதோ அந்தப் பிள்ளைகள் போகின்றன.

53. **நீங்கள், நீங்களே கூட போகாமல் இருந்துவிட்டு, உங்களுடைய பிள்ளைகள் ஞாயிறு பள்ளிக்கு போக வேண்டுமென்றும், கர்த்தரைச் சேவிக்க வேண்டுமென்றும் உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நீங்கள் ஒன்றுமே இல்லாமல் இருக்கும்போது, உங்களுடைய பிள்ளைகள் ஏதோவொன்றாக இருக்கும்படி உங்களால் எப்படி எதிர்பார்க்க முடியும்?** அது சற்று மூர்க்கத்தனமாகவும் எந்த மரியாதையும் காண்பிக்காமல் இருப்பதாகவும் இருக்கிறது, ஆனால் நான் அதை அந்தவிதமாகக்

கூறும்படி கருதவில்லை; ஆனால் நான் அதைக் கூறும்படி, அவர் என்னைக் கொண்டிருந்தார், எனவே நான்... இது முன்கூட்டியே தியானிக்கப்பட்டதல்ல. சரி. ஆனால் அது... நீங்கள் ஒன்றுமில்லை என்று நான் கூறக்கருதவில்லை, ஆனால் நீங்கள் எந்த வேலையையும் செய்யாதிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்போது, அதைத் தான் நான் சொல்லவருகிறேன். **நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக, அப்படிப்பட்ட ஒரு மாதிரியை வைத்திருக்கும்போது, அவர்கள் நீதிமான்களாக இருக்கும்படி உங்களால் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உங்களால் எவ்வாறு அதைச் செய்ய முடியும்? அவர்களுக்கு இருக்கும் மிகச் சிறந்த மாதிரி நீங்கள்தான். அவர்கள்... அதைப் பார்க்கும்போது, அவர்கள் உங்களைத் தான் பார்க்கப் போகிறார்கள். வேறு யாரையும் அவர்கள் பார்க்க மாட்டார்கள், ஏனென்றால் உங்களுடைய சுபாவம் தான் அவர்களுக்குள் இருக்கிறது.**

54. சாத்தானைப் போன்று, மனிதர்களைக் குறித்து மிக அதிகமாக அவனுக்குத் தெரியும்.

அவன் தேவனிடம், யோபிடம் சொன்னான், அவன், "ஒரு மனிதன் தன்னுடைய தோலுக்காக என்னத்தைக் கொடுப்பான்?" என்று கூறினான். நிச்சயமாக. மனிதனுடைய சுபாவத்தைக் குறித்து அவன் ஏதோ அறிந்தவனாகத்தான் இருக்கிறான். அதை தாறுமாறாக்கி (தவறான வழியில் திருப்புவதற்கு) அவன் துணை செய்தான். அவனுக்குத் தெரியும்… அவன் அதில் ஒரு கையை வைத்திருந்தான். அதைக் குறித்து அதிகமாக அவனுக்குத் தெரியும்… எவ்வாறு என்று அவன் இன்னும் அறிந்திருக்கிறான். **ஜனங்களை விழப்பண்ண என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். மனிதனுடைய சுபாவத்தை அவன் அறிந்திருக்கிறான்.**

55. உங்களை அதினிமித்தமாக விழும்படி செய்ய உங்களுக்கு முன்பாக எதைக் காண்பிக்க வேண்டுமென்று… அவனுக்குத் தெரியும். விஸ்கி மதுபானத்தின் மணத்தை எவ்வளவு நன்றாக வைக்க வேண்டுமென்றும், ஒரு சிகரெட்டை (புகைக்கும்படி) வைக்க, எவ்வளவு ஆசைகளைத் தூண்டி, அதை அடையும்படி, விடாது ஏங்க வைக்க வேண்டுமென்றும், வாலிப பையனோ சிறு பெண்ணோ, தங்கள் டீன்ஏஜ் வயதில், பீர் மதுபானத்தை குடிக்கும்படியாக, அவர்களை இங்கு

வெளியே ஒரு-ஒரு இடத்தில் எப்படி நன்றாக வைப்பது என்றும் அவனுக்குத் தெரியும். ஒரு சில வருடங்கள் கழித்து, (அவர்கள்) அந்தப் பழைய பைத்தியம் பிடித்த கண்களை உடைய அருவருக்கத்தக்க தோற்றமுள்ள விகாரமான கிழவிகளாக இருக்கும் அந்தப் படத்தை பார்க்கும்படி (வைக்க) அவன் முயற்சிக்கவே மாட்டான். அது சரியே.

56. முழுமையாக நிர்வாணமாக இருக்கும் ஒரு பெண்ணின் படத்தை வைப்பதில் அவன் சாகசம் செய்ய மாட்டான், ஆனால் அவளைக் கவர்ச்சியானவளாக ஆக்கும்படி எவ்வளவு துணிகளை அவளை விட்டு எடுத்துப்போட வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். நிச்சயமாக அது அவனுக்குத் தெரியும்.

57. **அவனுக்கு மனிதனுடைய சுபாவம் தெரியும். உங்களை அதற்குள்ளாக எவ்வாறு பிடிப்பது என்றும் கூட அவனுக்குத் தெரியும். அவன் இரவும் பகலும் விழித்திருந்து, கெர்ச்சிக்கிற சிங்கம்போல், எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிறான். நிச்சயமாக, அவன் அவ்வாறு தான் இருக்கிறான். எனவே அதை எவ்வாறு**

**செய்வது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது.**

58. ஆனால் தேவன் திரும்பிப் பார்த்தார், அவர் எலிசாவுக்குள் இருந்தார், அவன் (எலிசா) அந்தப் பிள்ளைகளை சபித்தான், உடனே காட்டிலிருந்து வெளியே ஓடிவந்த கரடிகளால், அவர்களில் 42 பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள், அந்தப் பிள்ளைகளில் 42 பேரை அவைகள் கொன்று போட்டன, ஏனென்றால் அவைகள் கீழ்ப்படியாதவைகளாக இருந்தன, **அந்தப் பிள்ளைகள் தவறான விதமான வீட்டில் வளர்க்கப்பட்டிருந்தன, தேவனுடைய தீர்க்கதரிசிக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக, தேவனுடைய தீர்க்கதரிசியை கேலி செய்யும்படி, அவைகளுக்கு தவறாகப் போதிக்கப்பட்டிருந்தது (கற்பிக்கப்பட்டிருந்தது).** நான் உங்களுக்குக் கூறுகிறேன், **நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.** நீங்கள் கிறிஸ்துவுக்கு மரியாதை செலுத்தும்போது, நீங்கள் தேவனுக்கே மரியாதை செலுத்துகிறீர்கள்.

59. இப்பொழுது, யார் தேவனுடைய பெரிய ஊழியக்காரர்? இங்கே பூமியின் மேலுள்ள ஏதோவொரு மனிதன் அல்ல. அது பரிசுத்த ஆவியானவரே. அவரைத் தான் நீங்கள் பரிகாசம் பண்ணுகிறீர்கள். அவரைப் பார்த்து தான் ஜனங்கள் நகைத்து, "இப்பொழுது, அந்த ஜனங்களைப் பாருங்கள். அவர்கள் வேடிக்கையாக நடந்துகொள்ளவில்லையா? அவர்கள் கொஞ்சம் பைத்தியமாகத்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்" என்று கூறுகிறார்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, நீங்கள் தேவனைத்தான் பரிகாசம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அது சரியே. அப்போது நீங்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்வீர்கள் (unpardonable sin); அது இம்மையிலும் அல்லது மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படவே மன்னிக்கப்படாது. அதற்கு விரோதமாக நீங்கள் ஒரு வார்த்தை பேசினாலும், அது ஒருக்காலும் மன்னிக்கப்படாது என்று இயேசு கூறியிருக்கிறார்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★















# ஆனால் தேவனோ அந்த பரியாசக்காரர்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: மரியாதைகள்

## Jeffersonville, Indiana, USA 61-10-15E

31. நாம் இப்பொழுது ஆரம்பித்து, வேதத்தில் காணப்படும் சில மனிதர்களைப் பார்ப்போம்.

முதலாவதாக, நான் நினைக்கிறேன் ..... நாம் சிறிது நேரம் நோவாவை எடுத்துக் கொள்வோம்.

நோவா தேவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றான். ஆனால், விஞ்ஞானம் உண்மையென்று

நிரூபித்தவைகளுக்கு அது முரணாயிருந்தது.

அவன் தேவனுடன் பேசினான், தேவனும் அவனுடன் பேசினார். அவன் பேழையை செய்யத் தொடங்கினான்.



அப்பொழுது பரியாசக்காரர் கடைசி நாட்களில் பரியாசக்காரர் எழும்புவார்கள் என்று வேதம்

கூறியுள்ளதே, அது போன்ற பரியாசக்காரர் அந்நாட்களிலும் இருந்தனர்.



இந்த பரியாசக்காரர் நோவாவை பரியாசம் செய்தனர்.

அவன் பேழை செய்வதைக் கண்டு, அவனுக்கு மூளைகோளாறு ஏற்பட்டுவிட்டதென்று எண்ணினர்.



ஆனால் தேவனோ அந்த பரியாசக்காரர்மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார்.

ஏனெனில் அவர்கள் தேவனுடைய செய்தியாளனின்

பிரசங்கத்துக்கு செவிகொடுக்காமல், பேழைக்குள் செல்ல மறுத்தனர்.





அப்பொழுது தேவன் தமது தெய்வீக நியாயத்தீர்ப்பை பூமியின் மேல் அனுப்பினார்.

முதலாவதாக, அதை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணங் கொண்டிருந்த அனைவருக்கும் அவர் ஒரு வழியை உண்டு பண்ணினார்.



அவர்கள் அதிலிருந்து தப்பவில்லையென்றால், அவர்களுக்கு ஒன்று மாத்திரமே உள்ளது. தப்பித்துக் கொள்வதற்கு தேவன் ஆயத்தம்பண்ணின வழியை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனால், ஒன்று மாத்திரமே உள்ளது. அது தான் தேவனுடைய நியாயத்தீர்ப்பு.



32. நீங்கள் இரண்டு காரியங்களை மாத்திரமே செய்ய முடியும் இரக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசிக்க வேண்டும்.



இவ்விரண்டில் ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றிரவு அந்நிலையில் தான் நாமிருக்கிறோம் நாம் தேவனுடைய

இரக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவருடைய நியாயத்தீர்ப்பில் நிற்கவேண்டும்.



அதிலிருந்து தப்பித்துக் கொள்ள விருப்பங்கொள்பவர்களுக்கு, தேவன் எப்பொழுதுமே அதற்காக ஒரு வழியை உண்டுபண்ணுகிறார். பின்பு அவர் ... மீதியுள்ளவர் நியாயத்தீர்ப்பில் நிற்கவேண்டும்.

தேவன் அவ்வாறு விரும்புவதனால் அல்ல, அவர்களாகவே அந்த வழியை தெரிந்து கொண்டதனால். பாருங்கள், தாங்களாகவே அந்த வழியை தெரிந்துகொள்கின்றனர்.



நண்பர்களே, இன்றிரவு நாம் அந்நிலையில் தான் இருக்கிறோம் – அதேதான்.



தப்பித்துக் கொள்ள தேவன் வகுத்த வழியை நாம் தெரிந்து கொள்ளலாம், அல்லது அவருடைய நியாயத்தீர்ப்பில் நாம் நிற்கலாம் இவ்விரண்டில் எதை

வேண்டுமானாலும் நாம் செய்யலாம்.

தப்பித்து கொள்ளும் வழியை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதற்காக, இன்றிரவு மகிழ்ச்சியாயிருக்கிறீர்கள் அல்லவா?

ஏனெனில் அந்த வழியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர் அனைவருமே நியாயத்தீர்ப்பின் கீழ் வரவேண்டும்.

★★★★★

# தேவன் தமக்கும் தமது ஊழியக்காரர்களுக்கும் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: **மரியாதைகள்**

Jeffersonville, Indiana, USA
61-10-15E

---

25. பிரசங்கி புத்தகத்தில், 12ம் அதிகாரம் 13ம் வசனத்தில், இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

**காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.**



முழு காரியத்தின் கடைத்தொகை தேவனுக்கு பயந்திரு” என்பதே.

உங்களுக்கு பயமில்லாமல் மரியாதை இருக்க முடியாது. உங்களுக்கு தேவன் மேல் பயமிருக்க வேண்டும்.

சாலொமோனும் கூட நீதிமொழிகளில், **கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.**" என்று கூறியுள்ளான் (நீதி. 9:10).

**அவரைக்கண்டு பயப்படுகிறீர்கள் என்று அர்த்தமல்ல. அவருக்கு மரியாதையும் பயபக்தியும் அளிக்கிறீர்கள் என்பதே அதன் அர்த்தம்.**

**நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்தும்போது, அவருக்கு பயப்படுகிறீர்கள்.**

அவருக்கு எந்த வகையிலாவது அதிருப்தி உண்டாக்கி விடுவீர்களோ என்று நீங்கள் பயப்படுகின்றீர்கள். நீங்கள் அப்படி செய்ய விரும்புவதில்லை.



26. நான் என் தாய்க்கு பயப்படுகிறேன், என் மனைவிக்கு

பயப்படுகிறேன், என் சபைக்கு பயப்படுகிறேன்.

நான் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு பயப்படுகிறேன் – அவர்களுடைய வழியில் எங்காவது இடறலை போட்டு விடுவேனோ என்று, நான் ஜனங்களுக்கு பயப்படுகிறேன்.

**நான் ஏதாகிலும் தவறு செய்து, அதன் காரணமாக நான் கிறிஸ்தவன் அல்ல என்று நினைத்து விடுவார்களோ என்று நான் நகரத்திலுள்ள ஜனங்களுக்கு பயப்படுகிறேன்.**

பாருங்கள், **உங்களுக்கு மரியாதை இருக்கும் முன்பே பயம்**

இருக்கவேண்டும். தேவன் அதை அதிகாரத்துடன் கேட்கிறார் (demand).



அவர் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார். அவர்

**அப்படி செய்கிறார். அவர் அதிகாரத்துடன் கேட்கிறார்.**

பயம் மரியாதையை அளிக்கிறது என்று நாமறிவோம்.

27. ஒரு மனிதனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அவன் ஒரு விவசாயி அல்லது கடையில் வேலை செய்பவன். யாருமே அவன் மேல் கவனம் செலுத்துவதில்லை. ஆனால் அவனுக்கு காவற்படையில் வேலை கிடைத்து, அவன் ஒரு போலீஸ்காரனாக தன் சீருடையையும், உத்தியோக சின்னத்தையும் (badge) அணிந்து தெருவில் வந்தால், அதற்கு

முந்தின நாள் வரைக்கும் அவனுடன் பேசாதவரும் கூட, "ஹலோ, ஜான் எப்படியிருக்கிறீர்கள்?" என்று கேட்பார்கள்.

பாருங்கள்? ஏன்? அது ஒரு விதமான ஆச்சரியம் (awe), பயம், மரியாதை, அவன் ஒருக்கால் நகராண்மைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்புண்டு.

28. ஜனாதிபதி கென்னடி ஜனாதிபதி பதவியை வகிக்காவிட்டால், இன்றிரவு அவர் என்னவாயிருப்பார்? அவர் முன்னைப் போன்று இப்பொழுதும்

ஒரு சாதாரண மனிதனாக இருந்திருந்தால் என்னவாயிருக்கும்?



அவர் இங்குள்ள கோல்கேட் நிறுவனத்தில் வாரம் ஒன்றுக்கு நாற்பது டாலர் ஊதியத்திற்கு வேலை செய்திருந்த தொழிலாளி அல்லவா?

அந்நிலையில் அவர் நகரத்துக்கு வந்திருந்தால், யாருமே அவர் பேரில் கவனம் செலுத்தியிருக்கமாட்டார்கள் அவருடைய சகாக்களைத் தவிர.

ஆனால் அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி என்பதால், அவருக்கு மரியாதை உகந்ததே, பாருங்கள்.

29. அதுபோன்று, **தேவன் தேவனாயிருப்பதால், அவருக்கு மரியாதை உகந்ததாகும். அது உண்மை.**

**அவருக்கு நாம் மரியாதை செலுத்த வேண்டும்.**

அவருக்கு நாம் பயப்பட வேண்டும், அது மரியாதையை கொண்டு வரும்.

தேவன் தமக்கும் தமது ஊழியக்காரர்களுக்கும் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார்.

தேவன் தமது ஊழியக்காரர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தி கேட்கிறார்.

அவருடைய ஊழியக்காரர்களை நாம் எவ்வாறு அறிந்து கொள்வோம்? அவர் தமது ஊழியக்காரர்களை தமது வார்த்தையினால் உறுதிப்படுத்துகிறார்.

அவர் இவர்களைத் தெரிந்துகொண்டு, தேவனுடைய ஊழியக்காரர்களாக்கி, அவருடைய வார்த்தை இவர்கள் மூலம் கிரியை செய்யும்படியாக செய்து, அவர்கள் தமது ஊழியக்காரர்கள் என்பதை நிரூபிக்கிறார். **அந்த ஊழியக்காரர்களுக்கு நீங்கள் மரியாதை செலுத்தும் போது, நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்துகின்றீர்கள்.**

**எனவே நான் உங்களுக்கும் நீங்கள் எனக்கும் மரியாதை செலுத்தி, நாம் ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துவோமானால், நாம் தேவனுக்கு மரியாதை செலுத்துகிறவர்களாயிருப்போம்.**



30. "மிகவும் சிறியவராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று இயேசு கூறவில்லையா? (மத். 25:40).

இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்றார். அவர் (மத். 18:6, 10) அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதால், நாம் தேவனில்

ஒருபாகமாயிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். தேவன் இந்த மரியாதையை நம்மிடம் அதிகாரத்துடன் கேட்கிறார். தேவன் தமது பிள்ளைகள் யாரென்பதை காண்பிக்கிறார். அவர் அற்புதங்களையும் அடையாளங்களையும் அவர்கள் மூலம் நடப்பித்து, அவர்களை அடையாளம் காண்பிக்கிறார்.

★★★★★

அவர், “நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். இல்லையேல் ஏதாவதொன்று சம்பவிக்கும்” என்றார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: மரியாதைகள்

## Jeffersonville, Indiana, USA
## 61-10-15E

எண்ணாகமம் 12:1 எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும், ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி:

எண்ணாகமம் 12:2 கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.

எண்ணாகமம் 12:3 மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும்

மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.

எண்ணாகமம் 12:4 சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள்.

எண்ணாகமம் 12:5 கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார், அவர்கள் இருவரும் போனார்கள்.

எண்ணாகமம் 12:6 அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி,

சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்.

எண்ணாகமம் 12:7 என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.

எண்ணாகமம் 12:8 நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்.

எண்ணாகமம் 12:9 கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

எண்ணாகமம் 12:10 மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற

குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.

---

ஆனால் வேறொன்றை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். தேவன் ஒரு செய்தியாளனை அனுப்பி, அவன் தேவனால் அனுப்பப்பட்ட செய்தியாளன் என்பதை அடையாளங்களினால் உறுதிபடுத்தியிருந்தால், அந்த செய்தியாளனுக்குக் கீழ்ப்படிதல் என்பது அவர்களைப் பொறுத்தது. முற்றிலும் உண்மை. அவர்கள் செய்தியாளனுக்கு கீழ்ப்படிந்து அவனுக்கு மரியாதை செலுத்த

வேண்டியது அவசியம். யோசுவாவையும் காலேபையும் பாருங்கள். அவர்கள் மோசேயின் சார்பிலேயே இருந்தனர். ஆம்,ஐயா. மோசே எதிலெல்லாம் ஈடுபட்டானோ, அவர்களும் அதில் ஈடுபட்டனர். மோசே செய்தது சரியோ தவறோ, என்னவாயினும் அவர்கள் அவனுடன் கூட இருந்தனர். ஏனெனில் அவன் தேவனுடைய செய்தியாளன் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

40. ஒருநாள் தீர்க்கதரிசினியாகிய மிரியாமும், பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் கூட, மோசேயின் மனைவி எத்தியோப்பிய

ஸ்திரீயாதலால், அவளை கேலி செய்து, ”விவாகம் செய்து கொள்ள நமது கூட்டத்தில் பெண்கள் இல்லையா என்ன? அதற்கு பதிலாக, அவன் இந்த பெண்ணை விவாகம் செய்து கொண்டானே’ என்று எண்ணினதாக நாம் பார்க்கிறோம். அது மோசே தெரிந்துகொண்ட பெண் அல்ல. தேவன் மோசேக்காக அவளை தெரிந்தெடுத்தார். அவர்கள் அதைக் குறித்து கேலி செய்தபோது, அது தேவனுக்கு கோபமூட்டின் காரணத்தால் அவர் தீர்க்கதரிசினியாகிய மரியாமை அடித்து அவளுக்கு குஷ்டரோகம் உண்டாகச் செய்தார். அவள் என்ன

செய்தாள்? அவள் தேவனுடைய செய்தியாளனை கேலி செய்து, அந்தகாலத்து உடன்படிக்கையின் தூதனிடம் அவபக்தியாய் நடந்து கொண்டாள். மோசேயின் வாயாக இருந்த பிரதான ஆசாரியனாகிய ஆரோனும் கூட அவளுடன் சேர்ந்து கொண்டான்.

அவனுடைய சகோதரிக்கு குஷ்டரோகம் பிடித்ததை ஆரோன் கண்டபோது, அவன் மோசேயிடம் சென்று, ’உன் சொந்த சகோதரி மரிக்க நீ அனுமதிப்பாயா?” என்று கேட்டான்.

மோசே கூடாரத்துக்குள் சென்று, தேவனுடைய சமுகத்தில்

முகங்குப்புற விழுந்து, அழுது, தேவனை நோக்கி கூப்பிட்டு, அவனுடைய சகோதரிக்கு இரக்கம் காண்பிக்கும்படி கெஞ்சினான்.



அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி வந்து, ஆரோனும் மிரியாமும் என் சமுகத்தில் நிற்கும்படி அவர்களை

அழைத்து வா” என்றார் (எண். 12:4). ஓ, என்னே!

தேவன் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார். தேவன் தமது செய்தியை அனுப்பும் போது, நீங்கள் அதற்கு செவிகொடுத்து, பயபக்தியாய் நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் உருளும் பரிசுத்தர் என்றோ, அல்லது வேறெந்த பெயரினால் அழைத்தாலும் கவலைப்படாதீர்கள். உலகம் தான். விரும்பினதை செய்யட்டும். ஆனால் நீங்களோ மரியாதை செலுத்துங்கள்!

41. மிரியாம் அங்கு நின்றாள். கர்த்தர், மிரியாமையும்

மோசேயையும் இல்லை, ஆரோனையும் – உன் சகோதரனையும் சகோதரியையும் – என் சமுகத்தில் நிற்கும்படி அவர்களை அழைத்து வா" என்றார்.

அவர்கள் தேவனுடைய சமுகத்துக்கு வந்த போது கர்த்தர், 'உங்களுக்கு தேவனிடம் பயமில்லாமல் போனதென்ன?' என்று கேட்டார். பிரதான ஆசாரியனாகிய ஆரோனையும் தீர்க்கதரிசினியாகிய மரியாமையும் பார்த்து அப்படி கேட்டார். "உங்களுக்குள்ளே ஒருவன் ஆவிக்குரியவன் அல்லது தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய

நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" என்றார். (எண். 12:6) அவன் ஆவிக்குரியவனாகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ இருந்தால். அவர், 'என் தாசனாகிய மோசேயிடம் நான் காதில் வாய்வைத்து பேசுகிறேன். நீங்கள் தேவனுக்கு பயப்படாமல் போனதென்ன?" என்றார். வேறுவிதமாக கூறினால், நீங்கள் மோசேயைக் குறித்து பேசுவது, என்னைக்குறித்து பேசுவதற்கு சமானம். நீங்கள் மோசேக்கு மரியாதை செலுத்தாவிட்டால், எனக்கும் மரியாதை

செலுத்துவதில்லை, மோசே என் தாசன் என்று உங்கள் மத்தியில் நான் நிரூபிக்கவில்லையா? உங்களுக்கோ அவன் மீது பயபக்தியே இல்லை ” என்றார்.

அது இக்காலத்து ஜனங்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்; மரியாதை இல்லை, கனப்படுத்துவதில்லை.

அவர், ”நீ அவ்வாறு செய்ததால், குஷ்டரோகியானாய். அதனால் தான் இவை யாவும் சம்பவித்தது. மோசே என் தாசன் என்பதை நீ அறிந்திருக்கவேண்டும். அது உனக்குத் தெரியும். அவனுக்கு விரோதமாக நீ எதை கூறினாலும், அதை எனக்கு

விரோதமாக கூறுபவளாயிருப்பாய்" என்றார்.



42. அவளுடைய உயிரைக் காப்பாற்றும்படி மோசே முறையிட்டான். தேவன் அவளுடைய உயிரைக் காப்பாற்றினார். அதற்கு பின்பு அவள் நீண்டகாலம் உயிரோடிருக்கவில்லை. அவள்

மரித்துபோனாள். ஆனால் அவளுடைய குஷ்டரோகம் நீங்கினது. அவள் ஏழு நாட்கள் பாளயத்துக்குப் புறம்பே தங்கியிருந்தாள் தன்னை சுத்திகரித்துக்கொள்ள. தேவன் அவளை சுகப்படுத்தினார்.



அவர் அவர்களுக்கு அறிவுறுத்த முயன்றது என்ன வெனில், ”நான் என்ன செய்கிறேனோ, அதற்கு நீங்கள் மரியாதை செலுத்த வேண்டும்.”

அந்த காலத்தில் அது தேவனுடைய மனப்பான்மையாய் இருந்ததென்றால், தேவன் மாறாதவராயிருப்பதால், அவர் இந்நாட்களில் செய்து கொண்டு வருவதற்கும் நாம் மரியாதை செலுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர் அதை அதிகாரத்துடன் கேட்கிறார். அவர், “நீங்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். இல்லையேல்

ஏதாவதொன்று சம்பவிக்கும்” என்றார்.

★★★★★

பகல் உணவு
வேளையில்,
கிறிஸ்துவுக்காக
ஒரு ஆத்துமாவைக்
கொள்ள ஒரு
இடத்தை
தேடிப்பிடித்து,
அங்கு நான்
செல்வது
வழக்கம்

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: மரியாதைகள்

Jeffersonville, Indiana, USA
61-10-15E

47. சில நாட்களுக்கு முன்பு நியூ ஆல் பனியில், ஒரு பாவியுடன் நான் நின்று பேசிக் கொண்டு, அவனைக் கிறிஸ்துவினிடம் வழி நடத்திக் கொண்டிருந்தபோது, மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் கொட்டகையிலுள்ள முரட்டு கையுடைய, பெரிய

உருவம் படைத்த ஒருவன் அவன் என் நண்பன். அவனுடைய மருமகன் பக்கத்திலுள்ள அந்த கொட்டகையின் உரிமையாளர். அங்கு பகல் உணவு நேரத்தில், நான் ஒரு சான்ட்விச்சை தின்றுகொண்டு, அவனிடம் தேவனைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன். பகல் உணவு வேளையில், கிறிஸ்துவுக்காக ஒரு ஆத்துமாவைக் கொள்ள ஒரு இடத்தை தேடிப்பிடித்து, அங்கு நான் செல்வது வழக்கம். அந்த பாவி, "திரு. பிரன்ஹாமே, என் தாய் அப்படிப்பட்ட மார்க்கத்தை, இருதயத்தை உணர்த்தும் மார்க்கத்தை கடைபிடித்திருந்தார்கள்" என்றான். அவன் கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

நான், "அவர்கள் மரித்து எத்தனை ஆண்டுகளாயின?" என்று கேட்டேன்.

அவன், அநேக ஆண்டுகள். அவர்கள் எனக்காக எப்பொழுதும் ஜெபம் செய்து வந்தார்கள் என்றான்.

நான், "அவர்களுடைய ஜெபத்திற்கு செவி கொடுத்த தேவன், இப்பொழுது பதிலளிக்கிறார்" என்றேன்.

அந்த முரட்டு மனிதன் அங்கு வந்து "ஹல்லோ" என்றான். அவன் குடித்திருந்தான். அவன், "பில்லி கேள். நீ இந்த கொட்டகைக்கு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். ஆனால் உன்னுடைய பழைய உருளும் பரிசுத்தர் மார்க்கத்தை இங்கே கொண்டு வராதே" என்றான்.

நான் திரும்பி அவனைப் பார்த்தேன். "கிறிஸ்து வரவேற்கப்படாத இடத்துக்கு நான் வரமாட்டேன்" என்றேன்.

எனவே அவர் என்னிடம் திரும்பி, "ஆ பையனே, உன் எண்ணத்தை விட்டுவிடு" என்றார்.

அப்பொழுது என் இருதயத்தில் ஒரு சத்தம், "நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய். உன் கழுத்தில் ஏந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே உன்னை அமிழ்த்துவது நலமாயிருக்கும்" என்றது.



அன்று பிற்பகல் அவனுடைய மருமகன், சரக்குகள் முழுவதுமாக ஏற்றியிருந்த இரண்டு டன் ஷெவர்லே லாரியை அவன் மேல் தெரியாமல் ஏற்றி, அவனைத் தரையில் கூழாக்கி விட்டான்.

பாருங்கள், நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். நீங்கள் அதை செய்தே தீர வேண்டும். தேவன் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார்.

★★★★★

# தேவனை தூஷித்த பெண் இரண்டு மணி நேரத்தில் மரித்தல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜுன் 1, 1962 மாலை, பத்தி எண் 263-267

ஒரு ஸ்திரீ மரணத் தருவாயிலிருந்தாள், நான் படிக்கட்டுகளில் ஓடி ஏறினேன். நான் இங்கு பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, அங்குள்ள கதவண்டையில் ஒரு மனிதன் நின்று கொண்டு என்னை அழைத்தார். அவள் வெளியே நடந்து சென்று விட்டாள் அவள் இந்த தெருவில் வசித்து வந்தாள். அவளுக்கு ஒரு பசு இருந்தது. அவள், “பில்லி கடைபிடிக்கும்

அவ்விதமான மார்க்கத்தை என் பசு கடைபிடித்தால், அதை நான் கொன்று போடுவேன்" என்றாள். அதை கூறின பிறகு ஒரு மணி நேரத்துக்குள் அவள் வியாதிப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள் – அழகான இளம் பெண். நான் அங்கு விரைவாகச் சென்றேன். அவளுடைய கணவர் கத்தோலிக்கர். அவர்கள் என்னை ஆளனுப்பி அழைத்திருந்தனர். அவள் மரித்துக் கொண்டிருந்தாள்... அவளுடைய கண்கள் வீங்கி விட்டன. அவள், "அவரைக் கூப்பிடுங்கள், அவரைக் கூப்பிடுங்கள்; அவரைக்

கூப்பிடுங்கள்; அவரை வேகமாக, வேகமாக கூப்பிடுங்கள்" என்றாள்.

அவளுடைய சகோதரன் ஓடி வந்து கதவண்டையில் நின்று கொண்டு, காத்திருந்து, காத்திருந்து, எனக்கு சைகை காட்டிக் கொண்டிருந்தார். இந்த இடம் ஜனங்களால் நிறைந்திருந்தது. சற்று கழிந்து யாரோ ஒருவர் வந்து ஒரு குறிப்பை மேசையின் மேல் வைத்தார். "மருத்துவமனையில் ஒருத்தி மரித்துக் கொண்டிருக்கிறாள்" என்று எழுதப்பட்டிருந்தது. அது சகோ. க்ரிம் ஸ்நெல்லிங் என்று நினைக்கிறேன். அவரிடம், "நான்

திரும்பி வரும் வரைக்கும் என் இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றேன். அவர் பாடலை தொடங்கி நடத்துவதற்காக அங்கு நின்று கொண்டிருந்தார். அந்த சமயத்தில் பிரசங்கிக்க அவர் அழைக்கப்படவில்லை. அவர் பாடலை தொடங்கி நடத்துவதற்காக வந்து கொண்டிருந்தார். நான் வெளியே சென்று, காரில் ஏறி, விரைவாக ஓட்டிச் சென்று அங்கு அடைந்தேன். நான் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று கொண்டிருந்த போது அவள் தன்னுடைய கடைசி மூச்சை விட்டாள். அவளுடைய குடல்களும், சிறுநீரகமும் இயங்கிக்

கொண்டிருந்தன. அவர்கள் அவள் முகத்தை மூடிவிட்டனர். நீராவி அப்படி வந்துக் கொண்டிருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த வயோதிப நர்ஸ், "சகோ.பிரன்ஹாமே, அவள் உங்களுக்காக அவளின் கடைசி மூச்சை விட்டாள்" என்றாள். அவள் அதை நேராக்க முயன்றாள், ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டது. ஒரே சமயத்தில் நீங்கள் அநேக பாவங்களைச் செய்யக் கூடும். அவள் ஒரு விதமான... அவளுடைய முகத்தில் ஆழமாக...

அவளுக்கு பொன்நிறமுள்ள தலைமயிர் இருந்தது – மிகவும் அழகான பெண். கத்தரிக்கப்பட்டிருந்த அவளுடைய தலைமயிர் கலைந்து புதரைப் போல் காணப்பட்டது. அவளுடைய பெரிய பழுப்பு நிற கண்கள் வெளியே தள்ளப்பட்டு பாதி மூடியிருந்தன. அவளுடைய முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள், அவள் அதிகமாக வேதனைப்பட்டதன் காரணமாக, அவளுடைய முகம் முழுவதிலும் சிறு வீக்கங்கள் போல் எழுந்து நின்றன. அவளுடைய வாய் திறந்திருந்தது. நான் அவளிடம் நடந்து சென்று அவளை உற்று

நோக்கினேன். அவளுடைய கணவன் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர், “பில்லி, நான் ஒரு கத்தோலிக்கன், அவள் பாவ விமோசன ஸ்தலத்திற்கு சென்றிருப்பதால், அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்” என்றார்.

நான், “என்ன?” என்றேன்.

“அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள். அவள் பாவ விமோசன ஸ்தலத்தை அடைந்திருக்கிறாள். இரண்டு மணி நேரத்துக்கு முன்பு அவள் உம்முடைய சபையை கடந்து செல்லும் போது, நீர் கொண்டுள்ள அவ்விதமான மார்க்கத்தை எங்கள்

பசு கொண்டிருந்தால், அதை அவள் கொன்று போடுவாள் என்று கூறினாள். அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்” என்றார்.

நான், “இப்பொழுது காலதாமதமாகி விட்டது. அவள் வேறொரு இடத்துக்குப் போகும் வரை காத்திருக்காமல், இங்கேயே தன் ஆத்துமாவை கழுவி சுத்திகரித்திருக்க வேண்டும்” என்றேன். பாருங்கள்? அது உண்மை. ஓ, ஆமாம். நமது துன்ப நேரத்திலேயே அவரை நாம் தேடுகிறோம். ஜனங்கள், “தேவன் பேரில் எனக்கு விசுவாசமில்லை” என்று கூறக் கேட்டிருக்கிறேன்.

ஒருமுறை அவர்களுக்கு துன்பம் உண்டாகட்டும், அவர்கள் முதலாவது கூப்பிடுவது அவரையே.

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962 மாலை, பத்தி எண் 263–267

★★★★★

அவர் உன்னை
அனுப்புவாரென்றால், உன்னை
முற்றிலுமாக காக்க வேண்டியது
அவருடைய பொறுப்பாகும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: மூவகை விசுவாசிகள்

## THREE KINDS OF BELIEVERS

*நவம்பர் 24, 1963 பிரான்ஹாம் கூடாரம் ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா*

---

198. ஒரு உண்மையான விசுவாசி தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொன்றையும் காதால் கேட்கமாட்டான். வார்த்தையையே அவன் எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருப்பான். பிழை கண்டு பிடிக்கும்படியான வாய்ப்புக்காக அவன் காத்திராமல், தேவனை

விசுவாசித்து அதிலே அவன் தொடர்ந்து நடக்கிறான். பாருங்கள்? அவனே விசுவாசிக்குரிய லட்சண மாயிருக்கிறான்.

199. அவிசுவாசி பத்து நிமிடங்கள் கூட செய்தியை கவனித்துக் கேட்காதவனாய் அங்கிருந்து வெளியே சென்று விடுகிறான். ஏனெனில் அது அவனுடைய மதக் கோட்பாடுக்கு விரோதமாயிருக்கின்றது.

200. இந்த பாவனை விசுவாசியோ (யூதாஸ்) ஒரு ஏமாற்றுக்காரன், சண்டாளன், கூடவே இருந்து குழிப்பறிப்பவன். சில சமயங்களில் இந்த பாவனை

விசுவாசிகள் ஜனங்கள் மத்தியில் பிரபலமானவர் களாயிருக்கின்றனர் என்பதை கவனியுங்கள். அது உண்மை. இவர்கள் சாத்தானின் குமாரர்களைப் போல அதிக படிப்புள்ள வர்களாகவும், வேத பாண்டியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் களாயும், மருத்துவர்களாகவும், ஞானம் பெற்றவர்களாகவும், அதிக வருமானம் உடையவர்களாயும், எந்தக் குறைவுமின்றி இருக்கின்றனர். கவனியுங்கள்.

201. சாத்தான் ஏவாளிடம் வந்தபோது, எல்லா வார்த்தையையும் ஒத்துக் கொள்கிறவனை போல

காணப்பட்டான். ஆனால் அவன் ஏவாளிடம் பலவீனமான பகுதி எது என்று காணு மட்டும் காத்திருந்து, பின்பு தன் வல்லமையைப் பிரயோகித்து அவளை காட்டிக் கொடுத்துவிட்டான். அதே சாத்தான் இயேசுவின் காலத்தில் யூதாஸின் ரூபத்தில் காணப்பட்டான். அந்த முதலாம் காலத்தில் சாத்தானின் ரூபம் அதுதான். அவன் யார்? அந்த காரியம், பலவீனமான இடம் எது என்று அவன் கண்டுபிடிக்கும் வரையில், வார்த்தையுடன் ஒத்துப் போவான்.

202. இன்று அவன் பலவீனம் எங்கு காணப்படுகிறது என்பதை காண காத்துக்கொண்டிருக்கிறான்.

ஆராதனைகளில் கூடவேயிருந்து அந்த சிறு பலவீனப்பகுதி காணப்படுமளவும் கவனித்திருந்து, ' அதோ அதுதான், அதுதான், அந்தவிதமாகத்தான் அது செய்யப்பட்டது” என்று கூறுவான். பாருங்கள்? அது அவ்வித மாகவேதான் உள்ளது.

203. அன்றிரவு நடந்த கூட்டத்தில் மேடையின் மேல் வந்த அந்த மனிதனின் காரியத்தை குறித்து உங்களுக்கு ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன். ஜெப அட்டைகளைக் குறித்தக் காரியம் ஒரு மனோவசியம் என்று அவன் எண்ணியிருந்தான். அதை

சோதித்தறி வதற்கு அவனுக்கு எல்லா உரிமையுமிருந்தது என்றும் அவன் எண்ணியிருந்தான். இந்த மனிதன் முழு சுவிசேஷத்தையும் விசுவாசியாத ஓர் ஸ்தாபனத்தின் அங்கத்தினன். அவன் என்னை சோதித்தறியும்படி மேடையின் மேல் வந்தபோது, நான் மிகவும் களைத்தவனாயிருந்தேன்.

ஊழியர்கள் என்னை அங்கிருந்து அப்புறப்படுத்த ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

204. அது ஒண்டாரியோவிலுள் வின்ட்சர் என்னுமிடத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் டெட்ராய்ட் என்ற இடத்திலிருந்து வின்ட்சர் இடத்திலுள்ள ஒரு பெரிய அரங்கம்.

205. இந்த மனிதன் மங்கின நிறமுடைய உடையும் சிகப்பு கழுத்துப்பட்டையும் அணிந்தவனாக அங்கு மேடையில் வந்தான். அவன் மிகவும் சாமர்த்தியமுள்ளவனாய் காணப்பட்டான். அப்பொழுது நான் அவனை நோக்கி, "நல்லது, ஐயா நான் உம் கையை பிடிக்க அனுமதிப்பீராக. நான் அநேக தரிசனங்களைக் கண்டு மிகவும் களைத்தவனாயிருக்கிறேன்" என்று கூறினேன். அவன் தன் கரத்தை என் கரத்தில் வைத்தான். அப்பொழுது நான் அவனை நோக்கி, "ஐயா உங்களுக்கு எந்த வியாதியும் இல்லை" என்று கூறினேன். அதற்கு அவன்,

எனக்கு இரண்டு வியாதியுண்டு' என்று கூறினான்.

206. அதற்கு நான், "எங்கே நான் மறுபடியும் பார்க்கட்டும்" என்று கூறி அவனுடைய கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "இல்லை ஐயா வியாதிக்குரிய அடையாளங்கள் காணப்படவில்லை. ஆகவே, நீ ஒரு சுகதேகியான மனுஷன்" என்றேன். அதற்கு அவன், 'என்னுடைய ஜெப அட்டையில் என்ன எழுதி யிருக்கிறதென்று வாசியும்" என்று கூறினான்.

207. அப்பொழுது நான், "ஜெப அட்டையில் நீர் என்ன எழுதி

வைத்திருந்தாலும், அதைக் குறித்து எனக்கு கவலையில்லை. ஜெப அட்டைக்கும் என்னுடைய ஊழியத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை” என்று கூறினேன். நான் ஒன்றையும் அறியாதவனாக இவ்விதம் கூறிக்கொண்டிருந்தேன். மேலும் நான் மிகவும் களைத்து சோர்ந்து போயிருந்தேன். ஆனால் தேவனுடைய கிருபையானது இன்னுமாக இங்கிருந்தது என்று ஞாபகம் கொள்ளுங்கள்.

208. அவர் உன்னை அனுப்புவாரென்றால், உன்னை முற்றிலுமாக காக்க வேண்டியது அவருடைய பொறுப்பாகும். அது

என்னுடைய காரியம் அல்ல. அவரே அதன் காரணர். அவரே என்னை அனுப்பினார். சத்தியம் எதுவோ அதற்காக மட்டும் நிற்பதே என்னுடைய வேலையாகும்.

209. மோசே தன்னுடைய கோலை அங்கே போட்டபொழுது அது சர்ப்பமாயிற்று. மந்திரவாதிகளும் அதே காரியத்தை செய்தனர். தேவனுடைய கிருபைக்காக மோசே அங்கு காத்து நிற்பதைத் தவிர வேறு என்ன செய்திருக்க முடியும்? அவ்வளவே. அவன் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டான். பின்பு நடந்த சம்பவம் என்னவென்று

உங்களுக்குத் தெரியுமல்லவா? பாருங்கள்?

210. அதுபோலத்தான் இச்சம்பவமும். இந்த மனிதன் அங்கு நின்று கொண்டு, "என்னுடைய ஜெப அட்டையை பாரும்" என்று கூறினான்.

211. அதற்கு நான், "நல்லது, நீங்கள் அதிக விசுவாசத்தையுடையவராயிருந்திருக்கின்றீர். ஆகவே உம் வியாதிகள் சுகமாக்கப்பட்டிருக்கும்" என்று எதையும் யோசியாதவனாய் கூறினேன்.

212. இதை நான் கூறினவுடனே அந்த மனிதன் தன் மேற்சட்டை பொத்தனை கழற்றி,

தன்னுடைய நெஞ்சை முன்னுக்குத் தள்ளி சபையோர்களிடம் திரும்பி, “எல்லோரும் இங்கே கவனியுங்கள்” என்றான். அப்பொழுது நான், “இங்கே என்ன நடந்து கொண்டிருக் கிறது” என்று யோசித்தேன்.

213. அவன் அவ்விதம் சபையாரின் கவனத்தைத் திருப்பி, “இங்கே நடக்கும் தந்திரத்தைப் பார்த்தீர்களா?” என்று கேட்டான். (அதுதான் யூதாஸின் ஆவி – இவன் ஒரு பயபக்தியுள்ள மனிதனாகவும் ஒரு ஸ்தாபனத்தின் பிரசங்கியாயுமிருந்தான்). அவன் மேலும் தொடர்ந்து, “எனக்கு அதிக விசுவாசம் இருக் கிறது என்று இவர் கூறுகிறார். இவர் அதிகமாக

பெலவீனப்பட்டு விட்டதினால் மனோவசியம் செய்ய முடியவில்லை. இனிமேலும் மனோவசிய சக்தி இவரிடம் போவதில்லை. என் வியாதிகள் என்னவென்று நான் ஜெப அட்டையில் எழுதியிருக்கிறேன். அதிலுள்ளதைக் கூட இவரால் கூறமுடியவில்லை. இது ஒரு ஏமாற்றுவித்தை" என்று கூறினான்.

214. அப்பொழுது நான், "என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே தேவனுடைய கிருபையானது தாழ இறங்கி வந்தது.

215. அப்பொழுது நான் அவனைப் பார்த்து, ”ஐயா, தேவனை ஏமாற்றும்படி சாத்தான் உன் இருயத்தை நிரப்பினதென்ன?” என்று கேட்டேன். அவன் ஒரு நவநாகரீக யூதாஸாயிருந்தான். நான் மேலும் அவனை நோக்கி, ’அமெரிக்காவிலுள்ள கிறிஸ்து சபை (Church Of Christ)யில் நீ ஒரு பிரசங்கியாயிருக்கிறாய். அதோ அங்கே நீல நிற உடையணிந்தவருடனும், அவருடைய மனைவியுடனும் அமர்ந்திருப்பது உன் மனைவியாகும். கடந்த இரவு நீங்கள் ஒரு மேஜையின் முன்பு அமர்ந்திருந்தீர்கள். அந்த

மேஜையின் மேல் போட்டிருந்த விரிப்பின் நிறம் பச்சை. இந்த ஊழியமானது மனோவசிய சக்தியினால் செய்யப்படுகிறதா என்பதை சோதித்தறியும்படி நீங்கள் தீர்மானித்ததின் பலனாக நீ இந்த இரவிலே இங்கு வந்திருக்கிறாய்” என்று கூறினேன்.

216. அதற்கு அந்த மனிதன், “நீங்கள் கூறினது உண்மையும் சத்திய முமாயிருக்கிறது. கர்த்தர் என் மேல் கிருபையாயிருப்பாராக” என்றான்.

217. நான் மேலும் தொடர்ந்து, “ஐயா, அந்த ஜெப அட்டையில் நீர் காசநோய் என்றும், புற்று நோய்

என்றும் எழுதியிருக்கிறீர்; அந்த இரண்டு வியாதிகளையும் இந்த கணமே நீர் பெற்றுக் கொள்கிறீர், அது உமக்குச் சொந்தமானது" என்று கூறினேன். அப்பொழுது அந்த மனிதன் என்னுடைய கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "நான் அவ்விதம் நோக்கம் கொள்ளவில்லை. "ஐயா" என்று கதறினான்.

218. அதற்கு நான், "என்னால் எந்தவித உதவியும் செய்ய முடியாது... நீங்கள் போகலாம். இது உமக்கும் தேவனுக்குமிடையேயுள்ள காரியம். உம்முடைய அழிவை நீரே ஜெப அட்டையில் எழுதிவிட்டீர்" என்று கூறினேன். அந்த இரண்டு

வியாதிகளும் அவனை பிடித்துக் கொண்டது. அதுவே அவனுடைய முடிவாயிற்று.

219. கவனியுங்கள், இந்த பாவனை விசுவாசிகள், ஏமாற்றுக்காரர்களாயிருந்து, தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் குற்றம் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள்! அவர்கள் யூதாஸாயிருக்கின்றார்கள். யூதாஸ் எவ்விதம் வெளிப்பட்டான் என்று உங்களால் காண முடிகின்றதா? பாருங்கள்? அவன் எவ்விதம் வெளிப்பட்டான். பாவனை விசுவாசிகளும் அவ்விதமே வெளிப்படுவர். அவர்கள் மெத்த படித்தவர்கள். வார்த்தைக்கும்

சமயகோட்பாட்டிற்கும் நடுவே ஒரு மகத்தான நிரூபித்தலானது வரும்போது இந்த பாவனை விசுவாசிகள் தங்கள் முன்னோடியான யூதாஸைப் போன்று தங்களை ஸ்தாபனத்திற்கு விற்று விடுகின்றனர். யூதாஸ் தன்னை வார்த்தையின் பாகமென்று உரிமைக்கொண்டாடின போதிலும், அவன் வார்த்தையாகிய இயேசுவை தன் ஸ்தாபனத்திற்குக் காட்டி கொடுத்துவிட்டான்.

★★★★★

# உங்களால் தேவனோடு விளையாட முடியாது



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: **ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை,**

ஏப்ரல் 28, 1956, சார்லெட், வட கரோலினா, அமெரிக்கா

---

182. பாருங்கள், அவன் எதையுமே பெற்றுக் கொள்ளவில்லை, **குற்றம் கண்டுபிடிக்க வருகிற வேறு யாருமே எதையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்**. ஆனால் ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு, அந்த சகோதரர்களைப் போன்று, **பயபக்தியோடு வருபவர்கள் தான், (அப்படி நீ வருவாயானால்) நீ**

**தேவனிடமிருந்து எதையாகிலும் பெற்றுக் கொள்வாய்.** என்னிடம் பயபக்தியோடு இருப்பதல்ல, நான் வெறுமனே உன்னுடைய சகோதரன் தான்.

---

183. இப்பொழுது, இதோ ஒரு சீமாட்டி இருக்கிறார்கள், அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்களை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை. நாங்கள் இருவரும் தேவனுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம், மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டங்களில் அது

சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அந்த இரவில் அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான்.

அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும், பாருங்கள். அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். **உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.**

★★★★★

# உங்களிலிருக்கிறவர் பெரியவர்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

அவர் பிழைத்திருக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை வாக்களிக்கின்றது. அவர் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைத்திருக்கிறீர்கள். "நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். அதே கிரியைகள். ஆனால் அதிகமான கிரியைகளை செய்வீர்கள். ஏனெனில் "நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். அவர் எல்லாவற்றின் மேலும் ஜெயங்கொண்டிருக்கிறார். அவர்தான் அன்று காற்றை நிறுத்தினார். அவர்தான் அந்த அணில்களை சிருஷ்டித்தார். அது இருமுறை சம்பவித்தது. சார்லி, ஒருமுறை அது நீங்கள் இருக்கும் இடத்தில் நிகழ்ந்தது. அடுத்த முறை சகோதரன் ஃபிரெட்டும் சகோதரன் பாக்ங்ஸூம் எங்களுடன் மலையின் மேல் இருந்த போது நிகழ்ந்தது.

இது ஜெர்மனியில் நிகழ்ந்தது. **அப்பொழுது என் ஒவ்வொரு பக்கத்திலும் பதினைந்து மந்திரவாதிகள்...** பில்லியும், சகோதரன் ஆர்கன்பிரைட்டும், என்னைக் காண அவர்களுக்கு அனுமதி தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள், "இந்த கூடாரத்தைச் சிதறப் பண்ணப் போகிறோம்"

என்று சவால்விட்டனர். **அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டு, மந்திரங்களைச் சொல்லி, தங்கள் தெய்வத்தை (பிசாசை) அழைத்தனர்.** **அப்பொழுது பலத்த புயல் காற்று வீசியது.** அந்த கூடாரத்தில் முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் ஜெர்மானியர் அமர்ந்திருந்தனர். **கூடாரம் இப்படியாக மேலே உயர்ந்து, கீழே விழுந்தது.** அவர்கள் ஒரு பறவையின் சிறகை கத்தரியால் வெட்டி, அதை கூடாரத்துக்கு நேராக காண்பித்துக் கொண்டிருந்தனர். **அவர்கள் அங்கு அமர்ந்திருந்து, தங்கள் மந்திரங்களை ஓதி,** இந்த மூன்று பரிசுத்த வார்த்தைகளை, "**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உஊ உஊ உஊ உஊ; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உஊ உஊ உஊ**" என்பதாக ஓதிக் கொண்டிருந்தனர்.

**அப்பொழுது பலத்த புயல்காற்று தோன்றினது. ஆம், சாத்தான் வான**

**மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவன். அவர்கள் புயல் காற்றை வரவழைத்தனர்.** அந்த பெரிய கூடாரம் ஒரு நகர வீடு வரிசை (City block) அளவிற்கு அவ்வளவு பெரியதாயிருந்தது. கான்வஸ் (Canvas) துணியினால் அது தைக்கப்பட்டிருந்தது. **காற்று அதற்கடியில் புகுந்து அதை அப்படியே தூக்கியது. காற்றும் மின்னலும் சேர்ந்து அதை பறக்கச் செய்தது.** நானோ தொடர்ந்து பிரசங்கம் செய்து கொண்டேயிருந்தேன்.

அவர்கள் தங்கள் மந்திரங்களை ஓதி, அந்த மூன்று சிறிய பரிசுத்த வார்த்தைகளாகிய, '**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி**' என்பவைகளை இரு புறத்திலும் உச்சரித்துக் கொண்டேயிருந்தனர். **அவர்கள் வணங்கின நிலையில் இருந்தபோது, அவர்களைப் பிசாசுகள் சூழ்ந்து கொண்டிருப்பதை நான் கண்டேன்.** ஆனால் அது கட்டப்படவில்லை.

நான் சகோதரன் லௌஸ்டரிடம், "இதை நீங்கள் மொழி பெயர்க்க வேண்டாம்" என்று கூறி விட்டு,

"சகோதரன் ஆர்கன்பிரைட், ஜெபம் செய்து கொண்டிருங்கள்" என்றேன்.

**நான், "பிதாவாகிய தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நீர்தான் என்னை இங்கு அனுப்பினீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெர்மானிய நாட்டில் காலடி வைத்தேன். ஏனெனில் நீர் என்னை இங்கு அனுப்பினீர்.** அந்த மேகத்திற்கு என் மீது எவ்வித அதிகாரமுமில்லை. ஏனெனில் நான் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்காக இங்கு அனுப்பப்பட்டுள்ளேன். **இங்கிருந்து நீ புறப்பட்டுச் செல்ல இயேசுவின் நாமத்தில் கட்டளைடுகிறேன்" என்றேன்.**

**அப்பொழுது இடிகள் முழக்கமிட்டுக் கொண்டே, உருண்டோடிவிட்டன. சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினது. கூடாரமும்**

**அமைதி பெற்று தன் சுயநிலைக்கு வந்தது.**

**பத்து நிமிடங்களுக்குள் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் பிரசங்க பீடத்தை சுற்றிலும் வந்து, இரக்கத்திற்காக கெஞ்சி, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் காண விரும்பினர்.** ஏன்? "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்**" பாருங்கள்?

"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" இந்த துன்பம், துயரங்களைக் காணும்போது, ஓ, சகோதரனே, சகோதரியே, நமக்கு எவ்வித கவலையுமில்லை. **தேவன் மகத்துவமுள்ளவர். அவர் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் நம்புகின்றீர்களா?** (சபையோர் – "ஆமென்" என்கின்றனர் - ஆசி).

*செய்தி:* 63-11-10E *உங்களிலிருக்கிறவர்*

★★★★★

தேவனை ஆவியில் தொழுது கொள்ளுகிறவர்களுக்கு விரோதமாக ஒன்றும் பேச வேண்டாம். அவர்களை தனியே விட்டுவிடுங்கள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: மரியாதைகள்

Jeffersonville, Indiana, USA
61-10-15E

---

43. அன்றொரு நாள் ஒரு மனிதன் என்னிடம் இவ்வாறு கூறினார் ... ஏழை மனிதன். அவருடைய ஜீவனத்துக்காக இந்த சந்தையிலுள்ள குப்பைகளை அவர் அடித்து கூட்டுகிறார். அவர் ஒரு லூத்தரன். அவர்கள் நற்கருணை ஆராதனை வைத்திருந்தனர். அவரால் நடக்க முடியவில்லை. எனவே அவர் வாடகை கார்

ஒன்றை அமர்த்தினார். அவருக்கு போக எண்பது சென்டும், வர எண்பது சென்டும் செலவானதாக என்னிடம் கூறினார். அவருடைய அடுத்த வீட்டுக்காரர் தேவபக்தி இல்லாதவர். ஒரு நாள் காலை இவர் கர்த்தருடைய ஜெபத்தைக் கூறுவதைக் கேட்டு அவர் சிரித்து கேலி செய்தாராம். அவர் இந்த மனிதனிடம், 'வாடகை காரில் இன்று காலை எங்கு சென்று வந்தீர்?" என்றுகேட்டார்.

இவர், 'நற்கருணையில் பங்கெடுக்க ஆலயத்துக்கு சென்று வந்தேன்" என்று விடையளித்தார்.

அவர், நற்கருணை என்றால் என்ன?' என்று வினவினார்.

இவர், "நாங்கள் அப்பம் புசித்து திராட்சை ரசம் குடிப்போம்" என்றார்.

அவர், இன்று காலை நானும் கூட ஒரு துண்டுரொட்டியையும் சிறிதளவு (Pint) விஸ்கியையும் அருந்தினேன்" என்றார். பாருங்கள்?

44. ஒருமுறை மூன்று பையன்கள் நற்கருணையை பாவனை செய்ததை நானறிவேன். அவர்கள் ஓட்டல் அறைக்குச் சென்று பன்றி இறைச்சி நிறைத்த 'சான்ட்விச்களையும் ஒரு குப்பி விஸ்கியையும் வாங்கி,

பெந்தெகொஸ்தே சபையில் அவர்கள் நடத்தும் நற்கருணையை கேலி செய்யும் வண்ணமாக, அவர்களுடைய நற்கருணையை புசித்தனர். மூன்று மாதங் களுக்குள் ஒருவன் மரித்துப் போனான்; மற்ற இருவரும் பைத்தியக்காரர் விடுதியில் சேர்க்கப்பட்டனர்.

**நீங்கள் தேவனை அவமதிக்கக் கூடாது. நீங்கள் அவரை மதிக்க வேண்டும். உங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை என்றால், பேசாமலிருங்கள். அதை விட்டு விலகி நில்லுங்கள். அப்படி செய்யுங்கள், இல்லையென்றால் பயபக்தியுடன் அதில்**

பங்குகொண்டு, அதற்கு மதிப்பு கொடுங்கள். ஆவியைப் பெற்றவர்களை கேலி செய்யாதீர்கள். தேவனை ஆவியில் தொழுது கொள்ளுகிறவர்களுக்கு விரோதமாக ஒன்றும் பேச வேண்டாம். அவர்களை தனியே விட்டுவிடுங்கள்.

★★★★★

***Only believe,***
***Only believe***
***All things are possible,***
***Only believe.***


சகோ. பினேகாஸ்

போன்: 8838623242,

9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in